பக்கங்கள் 6.

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை சதம் 6.

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன்கிழமை தோறும் வெளிவருவது

THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Published Every Wednesday

"எனது கடன் பணி செய்து கிடப்பதே"

"சாதி மதங்களைப் பாரோம்"

"காமார்க்கும் குடியல்லோம்"

மலர் 1. | 1928-ம் வருஷம், டிசம்பர் மீ 19உ புதன்கிழமை. | இதழ் 28.

## பாரதியார் 'குயில் பாட்டு'

ஒரு மதிப்புரை

திரு. அ நா. மகரபூஷணம், பி. ஏ. பி. எல்.

மேற்புலக் கலைகளின் கூட்டுறவின் பெரும் பயனாகப்பாரத தேசமும் தான் நெடுங்காலமாக ஆழ்ந்திருந்த பெருந் துயிலிலிருந்து படிப்படியாக விழித்துக்கொள்ள ஆரம்பித்தது. தேசம் எங்கும் புத்துணர்ச்சியும் புது நோக்கங்களும் பரவலாயின. தமிழ்நாடும் இந்நவ வேகத்தைத் தன் இதயத்திலே பெற்றுத்தமிழ் மக்களிடம் சுதந்திர தாகத்தையும் பாஷாபிமானத்தையும் பொழுதொரு வண்ணமாக வளரச்செய்து இத்தமிழ்ப் புதுவாழ்வைஒளியுறச்செய்த அறிஞர் ஒருசிலர். இவர்களில் தலைசிறந்தவர் சுப்பிரமணிய பாரதி. பாரதி தமிழ்ப் பெரும் புலவர் வரிசையிலே முன்னணியில் இடம் பெறும் தகுதியுடையவர்.

பாரதியாரின் இன்சுவை விந்தைப் பாக்களில் "குயில் பாட்டு" என்பது ஒன்று. இக்குயிலின் அற்புதக் காதற்கதை, ஆசிரியன்

"முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப் பட்டப்பகலிலே பாவலர்க்குத்
தோன்றுவதாம் நெட்டைக் கனவின்
நிகழ்ச்சியிலே........."

கண்டதோர் மோனக் கனவாகும். உண்மைக்காதல், எத்துணை இடையூறுகள் நேரிடினும் அவற்றையெல்லாம் தொலைத்துவெற்றிபெறும் என்பதே இக்கவிக்கனவின் உபதேசமாகும். "காதல் வழிதான் கரடுமுரடாமென்பர்." ஷேக்ஸ்பியர்என்னும் கவிச்சக்கரவர்த்தியும் "The course of true love never runs smooth" என்கிறார். ஆனாலும் காதலின் சாசுவதமான வெற்றியைப்பற்றிச் சிறிதும் ஐயமுறவேண்டுவதில்லை.

"காதல், காதல், காதல்,
காதல் போயிற், காதல போயிற்
சாதல், சாதல், சாதல்."

என்ற காதல் கானத்தின் பல்லவி வாசகரின் உள்ளத்திலே இடையீடின்றி ஒலிக்கத் தொடங்கி விடுகிறது. காதலர் இருவர்,—ரோமியோ, ஜூலியத் என்னும் பெருங்காதலரைப்போல் அதிர்ஷ்டமற்றவர்—, தங்கள் பேரின்பக் காதல்வாழ்வின் ஆரம்பத்திலேயே மரணத்தால் இணைபிரிகின்றனர். காதலன் இறக்குந் தறுவாயில்,

"சாவிலே துன்பமில்லை. தையலே இன்னமுநாம் பூமியிலே தோன்றிடுவோம்.
பொன்னே நினைக்கண்டு காமுறுவேன்.
நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்
இன்னும் பிறவியுண்டு, மாதரசே இன்ப
முண்டு நின்னுடனே வாழ்வேனினி
நேரும் பிறப்பினிலே."

என்று கூறும் மொழிகள் காதலின் நிலைபெற்ற ஜெயத்தின்முரசொலியாகும். அடுத்த பிறப்பிலும் அவ்வுண்மைக் காதலரைத் துன்புறுத்தும் பேய்களும் மாயங்களும்பல. இப்பொய்மைப் பிசாசுகளையும், மாயைகளையும் கிழித்துக் கொண்டு காதல் கதிரவன்ஒளி செய்கிறான். இதுவே 'குயில்பாட்'டின் கதையாகும்.

"காலையிளம் பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக்கடலோர்நெருப்பெதிரே சேர்மணி
போல் மோகனமாஞ்சோதிபொருந்தி மு
றைதவறு வேகத் திரைகளினால் வேதப்
பொருள் பாடிவந்துதமுவும் வளஞ்சார்
கரையுடைய"

என்று காம்பீரியத்துடனும் பேரழகுடனும் தொடங்கி,

நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்,
பேசுமிடைப் பொருளின் பின்னே மதி
போக்கிக் கற்பனையும் வர்ணனையும் காட்
டிக்கதை வளர்..."

த்தலின்றி, ஆசிரியன் கதை நடத்திச்செல்லும் சிறப்பு நம் மனதை ஆகர்ஷித்து விடுகிறது. கதைமுடிவில், கவிஞனின் 'சோலை-குயில்- காதல்' கனவெல்லாம் திடீரென்று மறைந்துவிட விழிதிறந்து பார்க்கையிலே,

சூழ்ந்திருக்கும் பண்டைச்சுவடி, எழுது
கோல் பத்திரிகைக் கூட்டம், பழம்பாய்
வரிசையெல்லாம் ஒத்திருக்க 'நாம் வீட்டி
ல் உள்ளோம்' எனவுணர்தேன்"

என்றகனவு நீக்கம் பரிதாபகரமாக இருக்கிறது. கவியும் சிறிது மனந்தேறித்தன் பகற்கனவு

"மாலைபழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி',

யென்று கண்டு கொள்ளுகிறான்.

கதையும் கதைசொல்லும் முறையும் இவ்வாறாகக் 'குயில்பாட்டின்' கவிதைநயம் மைப்பிரமிக்கச் செய்து உள்ளத்தை அடிமைகொண்டுவிடுகிறது. கதை நடத்தும் முறைச் சிறப்பிற்காகவன்று; மனிதர் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பெயர்த்துச்சொல்லும திறமைக்காகவுமன்று; மற்றுக்கவிதைஎன்றமுறையிலேயே இக்'குயில் பாட்டை" இங்கு நாம் எடுத்துக்கொண்டது. இவ் "இன்னிசைத் தீம்பாடலிசைத்திருக்கும் விந்தைதனை' யே இங்குநாம் மதிப்பிடப்புகுந்தது

"கானப்பறவை கலகலெனுமோசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளி
லும் ஆற்றுநீரோசை, அருவி யொலியி
னிலும் நீலப்பெருங்கடலெந் நேரமுமே
தானிசைக்கும் ஒலத்திடையே யுதிக்கு மி
சையினிலும் மானுடப் பெண்க[illegible]ளரு
மொருகாதலினால் ஊனுருகப்பாடு[illegible]லூ
திடுந்தேன் வாரியிலும் ஏற்றநீர்ப்பாட்டி
னிசையினிலும், நெல்லிடிக்குங் கோற்
றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொ
லியினிலும் சுண்ண மிடிப்பார்தஞ் சுவை
மிகுந்த பண்களிலும் பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும் வட்டமிட்டுப்
பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப்
பாட்டினிலும்

................................................—
நெஞ்சைப் பறி கொடுத்தேன் பாவியேன்"

என்ற குயிலின் அமுதமொழிகள், நமது கவிஞன்பிரகிருதியின் பேரெழில்களிலும், மனிதர்களின் இன்பக் களியாட்டின் மோகனத்திலும் ஈடுபட்டுக் கவிதை யுள்ளம்பெற்றதை எத்துணை அழகுடனும் இனிமையுடனும் சித்திரிக்கின்றன! இவ்வாறு கவிதை பயின்றஇதயம், பிரகிருதியின்பேரதிசயங்களிலே முதன்மைத்தான சூரியோதயத்தைப்பாடுகையில் காலைக் கதிரழகின் கற்பனைகளிலே பொருந்தி,

"தங்கமுருக்கித்தழல்குறைத்துத்தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?...'
என்றும்'

"புல்லை நகையுறுத்திப் பூவைவியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி
தந்துவிண்ணை வெளியாக்கி விந்தைசெயு
ஞ் சோதியினை"

என்றும் கூறும் பூரணமான கவிதை தமிழிலக்கியத்தையே என்றும் ஒளிசெய்து நிற்கும். இன்னும் குயில் புள்ளுரு நீங்கிப் பெண்ணுரு வெய்திய ஆச்சரியமாயையை,

"கோலத்தைக்காணவில்லை;
விண்டுரைக்க மாட்டாத விந்தையடா!
விந்தையடா! ஆசைக்கடலின் அமுதமடா! அற்புதத்தின்தேசமடா! பெண்
மைதான் தெய்விகமாங் காட்சியடா!"

என்று கவிபாடிச் செல்கிறார். அப்பெண்ணரசியின்

மௌனவழியில் மிகுந்த கவிதை யெல்லாம்
சொல்லி லகப்படுமோ?......"
"கவிதைக்கனிபிழிந்தசாற்றினிலேபண்,
கூத்தெனு மிவற்றின் சாரமெல்லாம்
ஏற்றியதனோடே மின்னுறுதைத் தான்கல
ந்து காதல் வெயிலிலே காயவைத்த கட்
டியினால் மாதவளின் மேனி வகுத்தான்
பிரமனென்பேன்"

எனவரும் அடிகளே ரஸம் சொட்டும் கவிதையின் எல்லையென்றே சொலவிடலாகும். "குயில்பாட்"டில் கவிதாரஸமே பிரதானமாவது என்று சொன்னோம். இதன் அற்புதக் கவிதையையும் செஞ்சொல் இன்பத்தையும் கானத்தையும் பருகிய நாம், இப்பாட்டின் மற்றைய அழகுகளை மறந்துவிடக்கூடாது. குயிலின் விந்தைக் குரலிலும் இன்னிசைப் பாட்டிலும்பரவசமான காதல் கவிஞன்,

மனிதவுரு நீங்கிக் குயிலுருவம்வாராதோ?
இனிதிக் குயிற்பேட்டை யென்றும் பிரி
யாமல், காதலித்துக் கூடிக் களிப்புடனே
வாழோமோ? நாதக்கனலிலே நம்முயிரை
ப்போக்கோமோ?

என்று ஏங்குதல் எத்தனை பொருத்தமாக இருக்கிறது! இனி நமது கவியின்நகைச்சுவையைப்பற்றி ஓரிரண்டு மொழிகள் கூறி இவ்வியாசத்தை முடித்து விடுவோம். குயில் குரங்கினிடம் கூறும்,

"மேனிபழகினிலும் விண்டுரைக்கும் வார்
த்தையிலும், கூனிருக்கும்கொலு நேர்த்
திதன்னிலுமே, வானரர்தஞ் சாதிக்கு மா
ந்தர் நிகராவாரோ?"

என்றகாதல் வார்த்தைகள் எத்துணை பெருநகைப்புண்டுபண்ணுகின்றன! இன்னும் (மனிதர்)" மீசையையும்தாடியையும்விந்தை
ச்செய்துவானரர்தம்ஆசைமுகத்தினைப்போ
லாக்கமுயன்றிடினும்ஆடிக்குதிக்கும்அழகி
லுமை நேர்வதற்கேகூடிக்குதித்துக்குதித்
தாலும் .........
வானரர்போலாவாரோ? வாலுக்குப்போவ
தெங்கே? என்றும்
"சைவசுத்த போஜனமும் சாதுரிய வார்
த்தைகளும் வானரர் போற்சாதியொன்று
மண்ணுலகின் மீதுளதோ?"

என்றுவரும் குயிலின் உரைகள் எத்துணை பரிகாசமும் ஆசியமும் கொண்டு ஒலிக்கின்றன!

'குயில்பாட்டு' பாரதியாரின் இன்னிசைகொட்டும் கவியின்பம் பயின்ற நூல்களிலே சிறந்தவொன்றாகும். கவி யின்பத்திலும் கானரசத்திலும் 'கண்ணன் பாட்டு' ஒன்றனுக்கே இக்குயிற்கதை சிறிது இளைக்கிறதென்று சொல்லவேண்டும். படிப்பில்லாத தமிழர்களும் பொருள் தெரிந்து மனமுருகுமாறு எளிய பதங்கள், எளிய சந்தங்களைக் கொண்டு உயர்ந்த கவிதை செய்து தந்து சுப்பிரமணிய பாரதி தமிழிலக்கியமறுமலர்ச்சியைச்சிறந்தொளிரச் செய்தார். தமிழர்கள் அவர் கவிகளைப்பாடியும் படித்தும் தங்கள் வாழ்க்கையைக் கவிமயமாகவும் இன்பமயமாகவும் செய்து கொள்வார்களாக.

# இந்தியக் கைத்தொழில்.

## முற்கால நிலைமை

'இந்தியாவானது இயற்கை விளைபொருள்களின் பெருக்கால் கைத்தொழிலில் மேம்பட்டு விலை உயர்ந்த சாமான்களுக்குப் பேர்போனதாக இருந்தது. வெகு காலமாக உலக வியாபாரத்திற்கு இருப்பிடமாய் இருந்தது.' என்று 'சேம்பர்ஸ்துரை' கூறுகிறார். மனிதனுடைய வாழ்விற்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள், நூல் சரக்குகள், சாய வஸ்துக்கள், எண்ணெய் வித்துக்கள், ஆடுமாடுகள், உலோகங்கள், மருந்துச் சரக்குகள் முதலிய சகல வஸ்துக்களும் ஒருங்கே இந்தியாவில் கிடைக்கின்றன. இவ்விளைபொருள்களைக்கொண்டு செய்யும் பல கைத்தொழில்களும் பழயகாலத்தில் வெகு சிறப்பாக நடந்துவந்தன. "இந்தியா ஒரு தொழில் சாலம்" என்று 'கிப்ளிங்துரை' கூறுகிறார். "இந்தியர் கண்ணால் கண்டதைக்கையால் செய்யச் சக்தியுள்ளவர்களாய் இருக்கிறார்கள்" என்று 'டெரிதுரை' கூறுகிறார்.

உலகத்தில் மற்றெந்த நாட்டையும் விட இங்கே இரும்பு அதிகமாக இருக்கின்றது. இரும்புத்தொழில் முன் வெகு சிறப்பாக நடந்தது. நம் பழய இரும்புத் தொழிலின் சிறப்பிற்கு வடக்கேயுள்ள குதுப்மீனார் என்னும் இரும்புத்தூணே சாட்சி. அதுசெய்து சற்றேறக்குறைய 1400 வருஷங்களுக்கு மேலாகியும் அதில் வெட்டப்பட்டுள்ள எழுத்துக்கள் இன்னும் புதியதாகவே இருக்கின்றன.

நம்முடைய சிற்ப வேலைகளைக்கண்டு புகழாதவர் கிடையாது. இந்தியர்கள் பிறவியிலேயே சிற்ப சாஸ்திரிகள் என்றும், இந்தியக் கோவில்களுக்கு ஈடாக ஐரோப்பாவில் ஒரு கட்டிடம்கூட இல்லை என்றும் 'ஹாவெல் துரை' கூறுகிறார்.

மரவேலைகளிலும இந்தியர் உயர்ந்தவர்களே. சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த அலெக்ஸாண்டர் அரசருக்கு தேவதாரு மரத்தில் வட்டமான மேஜை செய்து தந்தக்கால் வைத்துப் பதினாயிரம் பவுனுக்கு விற்கப்பட்டது.

பருத்தி, பட்டு, ரோமம் இவைகளால் செய்யும் துணிகள் வெகுஅழகாய்இருந்தன. நம் நாட்டுத்துணிகளுக்கு ரோமாபுரிப்பெண்கள் எடைக்கு எடை பொன் கொடுத்து வாங்கினார்கள். சீதாபிராட்டியார் உடுத்தியிருந்ததாக வால்மீகிரிஷி சொல்லும் சால்வை காஷ்மீரத்தில் தான் உண்டாக்கப்பட்டது என்று டாக்டர் 'ஹீரான்துரை' கூறுகிறார்.

நமது முன்னோர்கள் பலவிதக் கைத்தொழில்களை வெகு சிறப்பாய் நடத்தியதோடு, தாங்களே கப்பல்கள் செய்து மற்ற நாட்டிற்குத் தங்கள் சாமான்களை அனுப்பியும் வந்தனர். 2000 வருஷங்களுக்கு முன்னாலேயே இந்தியர்களுக்குக் கப்பல் கட்டத்தெரியுமென்று 'மாக்ஸ்டங்கர்துரை' கூறுகிறார். யுக்திகல்பதாரு என்னும் புஸ்தகத்தில் கப்பல் கட்டும் விதமும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பாண்டியர்கள் கட்டிய சில கப்பல்களில் 800 பேர் போகலாம். இங்கிலீஷ்காரர் இங்கே வந்தவுடன் நம்முடைய கப்பல்களை விரும்பி விலைக்கு வாங்கினதாக 'டிக்பி துரை' கூறுகிறார்.

இந்தியர்கள் இத்தகைய கப்பல்களில் தங்கள் சாமான்களை யூரோப்பாவிற்கு அனுப்பி அதற்காகத் தங்கம் வெள்ளி உலோகங்களை மலைபோலக் குவித்துக் கொண்டிருந்தனர் என்று 'லயால்துரை' கூறுகிறார்.

### தற்கால நிலைமை.

இந்தியக் கைத்தொழிலின் தற்கால நிலைமையென்ன? இந்தியக் கைத்தொழில் அநியாயமாய் அழிந்துவிட்டதென்று 'பர்ட்வுட் துரை' கதறியிருக்கிறார். மனிதனுக்கு வேண்டிய வஸ்துக்களில் அரிசி தவிர மற்றவையெல்லாம் அயல் நாடுகளில் இருந்தே இங்கே வருகின்றன. நாம் சாப்பிடும் தட்டமும், குடிக்கும் பாத்திரமும், உடுத்தும் துணியும், ஏற்றும் விளக்கும், தீப்பெட்டியும், எழுதும் பென்சலும், பிடிக்கும் குடையும் எல்லாம்அன்னியநாட்டுச்சாமான்களே.

"ஐயோ! நம்முடைய இந்தியா தேசம் ஒவ்வொன்றிற்கும் அயல் நாடுகளின்பேரில் சார்ந்திருக்கிறதே என்பதை நினைக்க, சாப்பிட்ட அரைவயிற்றுச்சாப்பாடும் எரிந்து போகிறது." என்று 'பி. ஸி. ரே.' எனனும் பெரியவர் வருந்துகிறார். முன்னாளில் அயல் நாடுகளுக்கு இந்தியாவில் விளைந்த பொருள்களைக் கொண்டு சாமான்கள் செய்து அனுப்பியதுபோக, இப்பொழுது விளைபொருள்களையே அனுப்புகிறோம். நாம் ஏற்றுமதி செய்யும் சரக்குகளும் ஜனங்களின் வாழ்விற்கு இன்றியமையாதவைகளாகும். அவைகளில் பெரும்பான்மை யாதொரு பிரதிப்பிரயோசனமின்றியே கொண்டுபோகப்படுகிறதென்று 'சாலிஸ்பரிதுரை' கூறுகிறார்.

நம்முடைய விளைபொருள்களை எல்லாம் பிறர்க்கு வாரிக்கொடுத்துவிட்டு, அவர்களுடைய சாமான்களை அபரிமிதமாக இறக்குமதி செய்கிறோம். உடுக்கும் துணி தவிர, மற்றெல்லாச் சாமான்களும் இந்தியர்களின் தினசரி உபயோகத்திற்கு வேண்டியவைகள் அல்ல. "ஆனால் அவைகள் ஆங்கிலேய ராஜாங்கத்தை உத்தேசித்தே வரவழைக்கப்படுகின்றன" என்று பி. ஸி. ரே.' சொல்லுகிறார். அதனால் வாழ்விற்கு இன்றியமையாத சரக்குகளின்விலை உயர, அனாவசியமான சரக்குகளின் விலை குறைவுபடுகிறது. ஜனங்களும் அனாவசியமான விலை குறைந்த டாமபீகச் சாமான்களில் தங்கள் சொற்ப வருமானத்தைச் செலவு செய்து கேடுறுகின்றனர்.

"இவ்விதமாய்க் கைத்தொழில் செய்யும் நாடாயிருந்த இந்திய தேசம் "கேவலம் விவசாயத்தொழில் செய்யும் நாடாக மாறிவிட்டது" என்று 'ஹெண்டிடக்கர்துரை' கூறியிருக்கிறார்.

### இந்தியக் கைத்தொழில் அழிவுக்குக் காரணம்.

இந்தியக் கைத்தொழில் முன்காலத்தில் சிறந்ததற்கும், இப்பொழுது அழிந்து போனதற்கும் காரணம் என்ன? முன்காலத்தில் இருந்த அரசர்கள் இந்தநாட்டிலேயே வாழ்ந்து வந்தனர்; இந்தநாட்டின் நன்மையையே கருதிவந்தனர். கைத்தொழில் விருத்திக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்து கொடுத்தனர்.

மகமதிய மன்னர்களும் அவ்விதமே செய்தனர். முகலாயர்நாளில் சக்ரவர்த்தியின் அரண்மனையிலேயே இந்தியாவிலிருந்த கைதேர்ந்த தொழிலாளிகள் யாவரையும் ஒருங்குசேர்த்துக் காப்பாற்றிக் கைத்தொழிலை மிக ஊக்கத்துடன் விருத்திசெய்து வந்ததாக 'எயினி ஆக்பரி' என்னும் நூலில் காணப்படுகிறது. அக்பர் பாதுஷா நேரில் ஆயுதசாலைக்கும் ராஜாங்கத் தொழிற்சாலைக்கும் சென்று தொழிலாளர்க்கு ஏராளமான பரிசு அளிப்பாராம். 'திப்பு சுல்தான் காலத்தில் சண்டைகள் அடிக்கடி நடந்து கொண்டிருந்தாலும் அவைகளால் தொழிலாளர்க்கு யாதொரு இடைஞ்சலும் ஏற்படவில்லை; அது கைத்தொழில் அபிவிர்த்தியைக் காண்பிக்கிறது' என்று அக்காலத்தில் இருந்த ஒருதுரை கூறுகிறார்.

ஆங்கிலேய அரசாட்சிவந்து 100 வருஷங்கள் ஆவதற்குள்கைத்தொழில்கள்எல்லாம் ஒழிந்துபோயின. கைத்தொழில்களை ஆங்கிலேயரே அழித்துவிட்டனர். இந்தியச்சரக்குகள் இங்கிலாந்திற்குள் வரவொட்டாமல், தாங்கமுடியாத சுங்கவரி விதித்துத்தடுத்து விட்டனர். இந்தியாவிலும் விளைபொருள்களை மட்டும் உண்டாக்கவும், அவைகளைச்சரக்குகளாகச்செய்யும் கைத்தொழில்களை நசுக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். 1769-ம்ஹுல்கும்பெனியார் வங்காள அரசாங்கத்திற்கு எழுதியகடிதமே சாட்சி. இங்கிலாந்தில் செய்த சாமான்களுக்கு இறக்குமதி வரிபோடாதது இந்தியக் கைத்தொழில் அழிவிற்கு மற்றொருகாரணம். "இந்தியா சுதந்தரமுள்ள நாடாய் இருந்திருக்கும் பட்சத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சாமான்கள் மீது கடுந்தீர்வைபோட்டு, தன்னுட்டுக் கைத்தொழிலைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்" என்று 'வில்ஸன் துரை' கூறுகிறார்.

ஜப்பான் முதலிய நாடுகளில் போல் அரசாங்கம் கைத்தொழிலை விருத்திசெய்யப்பண உதவியும் செய்வதில்லை. அரசாங்கத்திற்கு வேண்டிய சாமான்களைக்கூட இந்தியாவிலும் வாங்காமல் விலை சகாயமாய்க் கிடைக்கும் மற்ற நாடுகளிலும் வாங்காமல் விலை அதிகமாய்க் கொடுத்து இங்கிலாந்திலேயே வாங்குகின்றது. அரசாங்கம் வெள்ளைக்காரருடைய தொழில் விருத்தியையே நாடுகிறது. 'கேயர்டு துரை சொல்வது போல், இந்தியக் கைத்தொழிலைக் கெடுத்ததைக்காட்டிலும், தற்போதைய ஆகஷிமுறைவேறு கொடுமையைச் செய்யவில்லை.

### நூற்றல் நெய்தல் சிறப்பு.

மனிதவாழ்க்கைக்கு அத்யாவசியமாய் வேண்டியபொருள்கள் அன்னமும் ஆடையுமாகும். அன்னம் உயிரைக்காப்பது; ஆடை உயிரினும் உயர்ந்த மானத்தைக் காப்பது. ஆகலின் ஆடையைத் தரும் நூற்றல், நெய்தல் தொழில் பலசமயங்களில் பல தேசங்களிலும் வெகுசிறப்பாகவே கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது.

இந்துமதம்:— உலகத்தில் முதன்முதல் இயற்றப்பட்ட நூலென்று மேல் நாட்டாரும் ஒப்புக்கொண்ட வேதங்களில் 'நெய்தல்' என்னும் பதம் அடிக்கடி காணப்படுகிறது. ரிக்வேதம் பாவுஎன்றும், யஜுர்வேதம் ஊடைஎன்றும் அதர்வவேதம் கூறுகின்றது. மணமகன் மணவறையில் மணமகள்செய்த ஆடையையே உடுக்கவேண்டும் என்றும் அவ்வேதமே கூறுகின்றது. விஷ்ணுவைச்சிறப்பித்துக்கூறும் 1000 நாமங்களில் இரண்டின் பொருள் 'நூற்பவர்' என்பதேயாகும். விஷ்ணு முதலிய கடவுளர்க்கு பவித்ர த்வாதசி யன்று நூலையே மாலையாகச்சாற்ற வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

புத்தமதம்:... புத்தர்பெருமான் பெண்கள் மெல்லிய மஸ்லின் துணிகளை உபயோகிக்கக்கூடாதெனக் கட்டளையிட்டிருக்கின்றனர். குதலபீடன் என்பவன் சாகுந்தறுவாயில தான் இறந்தபின் தன்மனைவி வறுமையால் மறுவிவாகம் செய்துகொள்வாளோ என்று கலங்குகையில், அவன் மனைவி அதையறிந்துதனக்குநூற்கதெரியுமென்றும அதனால்தான் மறுவிவாகம் செய்துகொள்ளப் போவதில்லையென்றும், ஆகவே தன்கணவர் வருந்த வேண்டியதில்லை என்றும கூறியதாக புத்தசரிதைகளில் ஒரு கதைஉண்டு.

கிறிஸ்துவமதம்.—பைபிளில் பழைய ஏற்பாட்டில் சாலமோன் உபதேச மொழிகளில் இறுதி அத்யாயத்தில் உத்தம ஸ்திரீயின் லட்சணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. உத்தம ஸ்திரீயின் லட்சணங்கள் கணவனுக்குச் சமாதானமும் சம்பத்தும் தேடித் தருவதேயாகும். சமாதானம் அவளுடைய கற்புடைமையால்; வரும் சம்பத்து அவள் நூல் நூற்று நெய்து விற்றுப் பொருள் தேடுவதால் வரும்.

மகமதிய மதம்.—'பெண்களின் உத்தம தொழில் நூல்நூற்றலே' என்று மகமதுநபி கூறியதாக தாயெமுல் இஸ்லாம் என் என்னும் மகமதிய நூல் கூறுகின்றது. பெண்கள் வெளியிற் செல்லாமலும் பிறரை எதிர்பாராமலும் கற்புடன் ஜீவனம்செய்வதற்கு உதவுவதால் நூற்றல் பெண்களின் உத்தமதொழிலாயிற்று என்று ஒருமகமதிய நூலாசிரியர் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

ஸாக்ஸனி நாடு;— ஐரோப்பாவில் உள்ளநாடு. முன்னாளில் அந்நாட்டில் மணமகன் விவாக முகூர்த்தத்தன்று மணமகள் நெய்த உடையையே உடுத்துவது வழக்கமென்று லீபா துரை கூறுகிறார்.

இங்கிலாந்து:... மனிதனுக்கு அவசியம் வேண்டிய அன்னம் ஆடை இரண்டையும் தரக்கூடிய தொழில்கள் விவசாயமும். நூற்றல்நெய்தலுமாகும். ஆண்மகன் விவசாயத்தையும் பெண்நெய்தல், நூற்றலையும் செய்ததாக அவர்களுடைய பாஷை அறிவிக்கின்றது கணவன் என்பதற்குரிய இங்கிலீஷ் வார்த்தை (Husband); அதன் தாதுவின் பொருள் விவசாயம் (Husbandry) மனைவி என்பதற்கு மொழி (Wife); அதன் தாதுவின் பொருள் நெய்தல் (Weave). கன்னிஎன்பதற்கு மொழி (Spinster); அதன்தாதுவின் பொருள் நூற்றல் (Spin). இத்தகைய உயர்ந்ததொழில் யந்திரவசத்தால் அழிந்துவிட்டதைக் குறித்து ஆங்கில சமஸ்தான வித்வானுயிருந்த வோர்ட்ஸ்வொர்த் என்னும் மகா கவி மிக வருந்துகிறார்.

தமிழ்நாடு :— தமிழ்வேதம் உரைத்த திருவள்ளுவ நாயனார் அதில் உழவுத்தொழிலைப் புகழ்ந்ததோடு, செய்யும் தொழிலில் எல்லாம், நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' எனக்கூறியதாகவும் கர்ணபரம்பரை உண்டு. அவர்செய்துவந்த தொழிலும் நெய்தலேயாகும்.

### நூல்நூற்றல் நெய்தல் தொழில்

#### இந்தியாவில் முன்னிருந்த நிலைமை.

(1)உலகத்திலுள்ள பல ஜாதியாரில் இந்தியர்களே முதன் முதலில் இத்தொழிலைக் கையாண்டவர் என்பதற்கும், அப்படிக்கையாண்டதும் பல்லாயிரவருஷங்களுக்கு முன் என்பதற்கும் பல அத்தாட்சிகள் உள.

இந்தியர்களே முதன் முதலில் நாகரிகம் அடைந்தனர் என்பதை அறிஞர் பலரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். மனிதனுக்கு அத்யாவசியமாகிய அன்னத்தையும் ஆடையையும் உற்பத்திசெய்து உபயோகிப்பதே நாகரிகத்தின் முதல் அம்சமாகும்.

(1) உலகத்தில் முதன்முதலாக இயற்றப்பட்ட நூல் இந்து வேதங்கள் என்றும், அவை இயற்றப்பட்டகாலம் பல்லாயிர வருஷங்களுக்குமுன் என்றும் அறிவாளிகள் முடிவு செய்திருக்கின்றனர். அவ்வேதங்களில் உழுதல், நெய்தல் முதலிய பதங்கள் அடிக்கடி காணப்படுகின்றன. ஆகவே வேத காலத்திற்கு முன்னதாகவே இந்தியர் உழுதும் நெய்தும ஜீவித்திருக்கவேண்டும்.

(2) இந்தியர்கள் நெய்த துணி அழகாயும் மெல்லியதாயும் இருந்தது. அவை பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அதனால் இந்தியர்களுக்கு ஏராளமான செல்வம் கிடைத்தது.

3000 வருஷங்களுக்குமுன் எகிப்து தேசத்தில் அரசாண்ட அரசர்களின் பிரேதங்களின்மீது போர்த்தப்பட்டிருக்கும் துணிகள் மெல்லியவை, இந்தியாவில் செய்யப்பட்டவை என்று மேல்நாட்டார் கூறுகின்றனர்.

பாபிலோனியாவில் அரசுபுரிந்த சாலமோனுக்கு இந்தியாவிலிருந்து 'ஸிந்து' எனனும் துணி போயிற்றும். ஸிந்து என்றால் மஸ்லின் என்று பொருளாம்.

ரோமாபுரியில் சுமார் 2000 வருஷங்களுக்குமுன் வாழ்ந்திருந்த பிளினி என்பவர் அவ்வூரிலுள்ள பெண்கள் வருஷந்தோறும் சுமார் 40 லட்சம் பெறுமான இந்திய மஸ்லின் துணிகளை வாங்கியதாகக் கூறுகிறார். "பெட்ரோனியஸ்" என்பவர் அத்துணிகளில் சிலவற்றிற்கு 'காற்றால் செய்யப்பட்டது என்று பெயர்' எனக் கூறுகிறார், அதாவது அவைகள் அவ்வளவு மெல்லியவைகளாம்.

வெனிஸ்நகரத்திற்கு சுமார் 1000 வருஷங்களுக்கு முன்னிருந்த 'ராஜராஜசோழர்' காலத்தில் ஏராளமான துணிகளும் பட்டுகளும் அனுப்பப்பட்டதாகத்தெரிகின்றது. அக்காலத்தில் நெய்த துணி பாலாவிபோலும் பாம்புச் சட்டைபோலும் இருந்ததென தமிழ் நூல்களால் அறிகிறோம்.

(3) ஆங்கிலேயர் சுமார் 300 வருஷங்களுக்குமுன் இங்கே வந்தபொழுதும் கைத்தொழில் சிறப்பாகவே நடந்துவந்தது 1602-ம் ஹூத்தில் காப்டன் 'லாங்காஸ்டர் துரை' 20 கஜமுள்ள டாக்கா மஸ்லின் துணியைக் கைக்குட்டைபோல மடித்து தம் மகாராணி எலிஜபத் அம்மைக்குக் காணிக்கையாக அனுப்பியிருக்கிறார்.

பின் 1721-ம் ஹூத்தில் அரசாண்ட ஜெகாங்கீர் பாதுஷா காலத்தில் நெய்த மஸ்லின் 15 கஜம் நீளமுள்ளது முக்கால் பலம் நிறைதான் இருந்ததாம்.

1851ல் இந்தியர்கள் 1 ராத்தல் பஞ்சிலிருந்து 250 மைல் நீளமுள்ள, அதாவது 525 கிர். நூல் நூற்றதாக 'டாக்டர் டெய்லர்' துரை எழுதியிருக்கிறார்.

(தொடரும்.)

## விமரிசனம்.

'இளந்தமிழன்.'

தூத்துக்குடியிலிருந்து வெளியாகும் 'இளந்தமிழன்' என்னும் மாதப் பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றோம். இதன் ஆசிரியர் தீவிர தேசாபிமானியும், செந்தமிழ் வளர்ச்சியின்பால் பேரார்வமுங் கொண்ட இளைஞர் திரு. க. சோமயாஜுலு அவர்கள். தேசபக்தி காரணமாகத் திரு. சோமயாஜுலு பற்பல இன்னல்களுக்கு ஆளானதும், சமீபத்தில் 15 மாதம் சிறைவாசம் செய்ததும் தமிழுலகிற்குத் தெரிந்ததே. இளந்தமிழன் இலக்கிய ஆராய்ச்சி, வீரர் சரித்திரம், மாதர் முன்னேற்றம், கைத்தொழில் விருத்தி முதலிய பல துறைகளைப்பற்றிய சிறிய கட்டுரைகளுடனும், சுவையுள்ள பாக்களுடனும் திகழ்கின்றது. தமிழ்நாட்டில் இத்தகைய பத்திரிகைகள் அனந்தம் தோன்றவேண்டுவது அவசியம். தமிழ்நாட்டு இளைஞர்களும் மற்றேரும் போதிய ஆதரவளித்துதவினால் 'இளந்தமிழன்' விரைவில் மிகுந்த முன்னேற்ற மடைந்து ஊழியஞ் செய்துவரச் சந்தர்ப்பமேற்படும். 'இளந்தமிழன் உரம்பெற்று நீடூழி வாழவேண்டு மென்று இறைவனை வேண்டிக்கொண்டு அதற்கு நல்வரவு கூறுகின்றோம். பத்திரிகை உயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. வருட சந்தா ரூ. 4—0—0.

'இளந்தமிழன்' காரியாலயம்,
தூத்துக்குடி.

---


# தாய்மார்களே!

நீங்கள் பரிபாலித்துவரும் இளங்குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் பலத்தையும் சோதனை செய்து பாராதீர்கள்.

எக்காரணம் பற்றியாவது உங்கள் குழந்தைகளுக்கு பிறப்புரிமையாகிய இயற்கைபால் ஆகாரத்தை கொடுக்கமுடியாத நிலைமையிலிருப்பீர்களானால், அதே நிலைமையிலுள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஆரோக்யத்தையுண்டுபண்ணுவதில் மிகச்சிறந்ததென நிரூபிக்கப்பட்டுள்ள **லக்டோஜன்** என்ற பாலாகாரத்தையே வாங்கிக் கொடுங்கள்.

**லக்டோஜன்** என்ற பாலாகாரம் உலகத்திலுள்ள பல பிரபல டாக்டர்களாலும் தாதிகளாலும் படுக்கையிலிருக்கும் நோயாளர்களாலும் உபயோகப்படுத்தப்பட்டு மிகவும் மேன்மையானதென்று புகழ்ந்து பாராட்டப்படுகின்றது. ஆகையால் அவர்களுடைய உபதேசத்தையும் அனுபவப் பழக்கத்தையும் பின்பற்றி அவர்கள் அடைந்த பயனை நீங்களும் அடையும்படி உங்கள்குழந்தைகளுக்கு **லக்டோஜனையே** கொடுங்கள்.

அதுசவ குழந்தைகளுக்கும், பலமற்றவர்களுக்கும் இயற்கையானபாலாகாரம்.

சோதனை பார்ப்பதற்கான இலவச ஸேம்பிள்களும் இச்சிறந்த பாலாகாரத்தைப்பற்றிய முழுவிவரங்களும் தேவைப்படுவோர் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.




நெஸல்ஸ் (C.I.1)
தபால் பெட்டி 189,
கொழும்பு.



# "ஹோமொஜென்"

ஹோமொஜென் உயர்ந்த ஆஸ்டிரேலியன் பசுக்களின் பாலிலிருந்து புதுப்புதிய ரசாயனமுறைகளில், மனிதர் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

ஹோமொஜெனில் குழந்தையைப் புஷ்டியுடன் வளர்ப்பதற்கு வேண்டிய சகல பொருள்களும் போதிய அளவு சேர்ந்திருக்கின்றன.

ஹோமொஜென் பரிசுத்தமானது, எளிதில் ஜீரணமாகக்கூடியது, வயிற்றுக்கு இதமானது. மாதிரிக்கு எழுதவும்.




SOLE AGENTS FOR CEYLON:—
The Central Medical Stores,
Main Street, COLOMBO.



# "ஆர்கையில்"

திவிசக்கிர (சைக்கிள்) வண்டிகள்



இலங்கையில் மிக குறைந்த
விலைரூபாய் 85-00

சிறு தொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம்.

**HOARE**
& CO (ENGINEERS) LTD
தபால் பெட்டி நெ. 22
கொழும்பு.

---

ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.



# பிரசவ ஆஸ்பத்திரி.

இதுபெண்களின் பிரசவகால வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே பிரசவத்திற்கு வருகிறவர்களை, அனுபவமும், திறமையும் வாய்ந்த, ஓர் டாக்டர் அம்மாளவர்கள். பார்வையிட்டு வைத்தியம் செய்வார்கள்.

சிகிச்சைகள் மிகவும் கவனத்துடன் நடத்தப்படும்.

சார்ஜ்கள் சல மானவையாயிருக்கும்.

பிரசவத்திற்காக, ஸ்திரீகள் தூரமான இடங்களிலிருந்து, சொந்த நாடுகளுக்குப் போவதால் நேரிடக்கூடிய தாயிருக்கும் பெருத்த தொல்லைகளும் அசௌகரியங்களும், செலவுகளும், இந்த ஆஸ்பத்திரிக்கு வருவதனால் நீக்கப் படுகின்றன. இதற்காகவே இந்த ஆஸ்பத்திரி நடத்தப்படுகின்றது.


முழுவிபரங்கள் அறிய விரும்புவோர் கீழேகாணும் விலாசத்துக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

மிஸ். எதல் ஐஸேக்ஸன்
பிரசவ ஆஸ்பத்திரி
107 B. ஹல்ஸ்டார்ப்தெரு
கொழும்ப.



# சுருண்ட உரோமத்தை பளியச்செய்து

நாள் முழுதும் உங்களது பார்வையை அலங்காரமாகவும் செம்மையாகவும் ஆக்குகின்றது.



டாக்ட்டர் ட்ராலியின்
**லயன்**
**ப்ரில்லியன்டைன்**

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. Adycappa Chetty
COLOMBO (C. I.4)


## தொழிலாளியும் முதலாளியும்.

---

இலங்கைத் தோட்டக்காரர் சங்கத்தினுடைய சென்ற பொதுக்கூட்டத்திற்கு இந்தியா கவர்ன்மெண்டு ஏஜன்டான திரு. ஹைதரியும் விஜயஞ்செய்யும்படி அழைக்கப்பட்டிருந்தது நமக்குக் களிப்பைத் தருகின்றது. பல தோட்டக்காரர்களும், உயர்ந்த பதவிகளிலிருக்கும் சில இந்தியரும் இந்தியா கவர்ன்மெண்டு ஏஜண்டினுடைய ஸ்தானம் அவசியமில்லையென்றும், அதனால் யாருக்கும் எவ்விதப் பயனுமில்லையென்றும், சிலருக்கு அது வெறுப்பை யளிக்கக்கூடுமென்றும் அபிப்பிராயப்பட்டுவருகின்றனர். இத்தகைய மனோபாவத்தையே மேற்படி சங்கஅக்ராசனரான திரு. வில்லியர்ஸ் தமது பிரசங்கத்தில் வெளியிட்டார். அவர், 'இந்தியா கவர்ன்மென்டார் தங்கள் தொழிலாளர்களை மேல்பார்த்துவர ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருப்பதைச் சிலர் தேவையில்லாததென்று எண்ணக்கூடும்" என்று கூறியிருக்கிறார். ஆயினும் திரு. வில்லியர்ஸ், மிஸ்டர் ஹைதரி தோட்டக்காரர்களுக்கு இடுக்கண் விளைந்த காலங்களில் மிகுந்த அன்புடன் நடந்துகொண்டும், உண்மையை அறிந்து கௌரவமாய்க் காரியங்கள் செய்தும் வந்ததைப்பற்றிப் புகழ்ந்து பேசியிருக்கிறார். மிஸ்டர் ஹைதரி இப்புகழுக்குரியவரே. அவர் தமது கடமைகளைத் திறமையுடன் முடித்துவருகிறா ரென்பதோடு அவர் இந்தியர் சம்பந்தமான விஷயங்களை ஆதரவுடன் கவனித்து சிறிதும் அஞ்சாது தொண்டாற்றி வந்திருப்பதையும் நாம் மறக்க முடியாது.

இந்தியா கவர்ன்மெண்டு பிரதிநிதியின் ஸ்தானம் அவசியமா, இல்லையா என்பதைப்பற்றி ஆலோசனைசெய்ய இது தருணமன்று. அது முடிந்துபோன விஷயமாயிருக்கிறது. பிரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள குடியேற்ற நாடுகளில் இந்தியத் தொழிலாளர் சென்று தொழில்புரியவேண்டிய அவசியமேற்படின், அவர்கள் நலம்பேணி இந்தியத் துரைத்தனத்தார் தமது பிரதிநிதியை அந்நாடுகளில் வைப்பது முதற்கண் செய்ய வேண்டிய வேலையாயிருக்கிறது. அந்நாடுகளும் இதற்கு ஒப்புக்கொள்ளவேண்டியது கடமையாயிருக்கிறது. திரு. ஹைதரி தன்னை அழைத்திருந்தவர்களுக்குத் தனது உத்தியோகத்தின் நடைமுறையையும், நோக்கத்தையும் விளக்கிக்கூறியுள்ளார். இந்தியா ஏஜண்டு தோட்டக்காரரிடமிருந்து பணம் பிடுங்கிப் பயமுறுத்துவதற்காக நியமிக்கப்படவில்லையென்பதை அவர் எடுத்துக் கூறினார். தொழிலாளர் அபிப்பிராயங்களைத் தோட்டக்காரரிடம் எடுத்துச் சொல்லித் தர்க்கம்செய்து விளக்கி; தொழிலாளருடைய துன்பங்களையும் குறைகளையும் நிவர்த்தி செய்வதே தனது கடமையென்று அவர் கூறியது மிகப் பொருத்தமேயாகும். இன்னும் திரு. ஹைதரி, "தோட்டக்காரர்—தொழிலாளர் இருவருடைய காரியங்களும் (அபிலாஷைகளும்) ஒன்றாகவேயிருக்கின்றன. தொழில் கெட்டுப்போயிற்றானால் தொழிலாளரும் கஷ்டப்பட வேண்டியதுதான்" என்று கூறித் தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமுள்ள சம்பந்தத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். இதுவே இருவருக்குமுள்ள உண்மையான சம்பந்தமாகும். இருவரும் ஒன்றுசேர்ந்தே முன்னேறவோ பின்னடையவோ கூடும். ஒருவரை வஞ்சித்து ஒருவர் மேன்மையடையக் கருதும் பொழுதுதான் பூசல் விளைகிறது. தொழிலாளரும் முதலாளிகளும் இவ்வுண்மையை அறிந்து நடந்தால், இதுகாலை அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் துவேஷமும் பூசலும் ஒழிந்துபோகும்.

---

## அறிவிப்பு.

புதுவருட விடுமுறை காரணமாக நமது ‘இலங்கை இந்தியன்’ 26-ம் ஜனவரிமீ 2-ம் தேதிகளில் வெளிவராது.

காரியஸ்தர்,
‘இலங்கை இந்தியன்’


# இலங்கை இந்தியன்.

1928-வூ டிசம்பர் மீ 19உ


## சட்டசபை சீர்திருத்தத்தைப் பற்றிய கூட்டங்கள்.

சமீபத்தில் டோனமூர்சீர்திருத்த விஷயமாக சட்டசபை அங்கத்தினர்கள் கவர்னரைச் சந்தித்துப் பேசிய விஷயமாகச் சிலபத்திரிகைகள் வெறுப்புக் கொண்டுகண்டித்து வருகின்றன. பொதுஜனங்களுடைய பிரதிநிதிகளான அங்கத்தினர்கள் ஜனங்களுடைய நன்மைக்கு விரோதமாக கவர்னருடன் ரகசியமான ஒப்பந்தங்கள் செய்வதாயும் கூறப்பட்டு வருகிறது. பொதுஜனங்கள் அறியக்கூடாதபடி அதிகரகசியமாயுள்ள ஒப்பந்தங்களுக்கு மேற்படி பிரதிநிதிகள் உட்பட்டிருத்தல் கூடுமென்றெடுத்துக் காட்டப்படுகிறது. ஒரு ஜனசமூக சம்பந்தமான முக்கிய வேலையைப்பற்றி தர்க்கம் செய்யவும முடிவான தீர்மானம் செய்யவும் ரகசியமுறைகள் கையாளப்படுவதை நாமும் கண்டிக்கிறோம். ஆனால் சட்டசபையில் சீர்திருத்த விவாதம் நடக்கப்பட்டபோதாரணையிலிருந்து கவர்னருடன் அங்கத்தினர்கள் சம்பாஷித்து ஒருவரை ஒருவர் கலந்தறிந்து கொண்டு ஒருவிதமுடிவிற்கு வரவேண்டியதைத் தவிரவேறு வழிஇல்லை. அவ்வாறு நடந்த சம்பாஷணைகளில் முக்கியமாய் விவாதிக்கப்பட்ட விஷயம் இலங்கையிலுள்ள இந்தியத்தொழிலாளர்க்குவாக்குரிமை வழங்குவதையொட்டியது. சட்டசபை விவாதத்தின்பொழுது மிஸ்டர் மொல்லமூறே இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதற்கு இலங்கையிலேயே குறித்தகாலம் தங்கவேண்டுமென்றும் அதுவே மற்றையதோட்டக்கார ராஜதந்திரிகளுக்கும் சம்மதமான நிபந்தனையென்றும் கூறினர். இது விஷயமாக குயின் மாளிகையில் நடந்த விவாதங்களில் எவ்வித முடிவு ஏற்பட்டதென்று தெரியவில்லை. இந்தியக் கவர்ன்மெண்டினுடைய ஏஜண்டு கவர்னருடைய ஆலோசனைக்கு எவ்விஷயத்தைக் குறித்து வற்புறுத்தியிருக்கிறார்என்பதும்நமக்குத்தெரியாது. இரண்டு இந்தியப் பிரதிநிதிகளும் இது விஷயமாய் எவ்வித மனப்பான்மையுடன் இருந்தனரென்பதும் நமக்குத் தெரியவில்லை. இலங்கையிலுள்ள இந்தியர்கள் நலம் பழுதாகக்கூடிய முறையில் திரு. ஹாரியும் மற்றஇரண்டுஅங்கத்தினர்களும் நடந்து கொண்டிருக்க மாட்டார்களென்று நாம் நம்புகிறோம். ஆனால் முக்கியமான ஒருவிஷயத்தைக் குறிப்பிட்டு வற்புறுத்த விரும்புகிறோம். வாக்குரிமை விஷயமாக இந்தியர்க்கும் இலங்கையர்க்கும் எவ்விதபேதமும் இல்லாமல் சமத்துவநிலை ஏற்படுத்தும்வரை அவர்கள் முயற்சியை ஓயவிடுதல் கூடாது. இலங்கையர் யாவருக்கும் நிபந்தனையின்றி வாக்குரிமை அளிக்கப்படுவதை நாம் வரவேற்கிறோம் ஆனால் இங்குள்ள இந்தியருக்கும் அந்தஉரிமைகள் வழங்கப்படவேண்டும். இலங்கையருக்கு நிரந்தரவாக்குரிமை வழங்கப்படாமல் கல்விநிபந்தனை ஏற்படுத்தப் படுமாயின் இந்தியருக்கும் அத்தகைய நிபந்தனை ஏற்படுத்துவதில் எமக்கு ஆசேபணையில்லை. அதாவது இலங்கையரை எந்த நிபந்தனைகள் கட்டுப்படுத்துமோ அதே நிபந்தனைகள்தான் இந்தியரையும் கட்டுப்படுத்தவேண்டும். குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு கவர்னர் சிபார்சு செய்து அனுப்பும் வாக்குரிமை விஷயம் எவ்வாறிருப்பினும் இந்தியர் வாக்குரிமைக்கு இலங்கையில் வசித்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை கூறப்படுமாயின் அது எல்லா இந்தியத் தொழிலாளருக்கும் மற்றையோருக்கும் மிகுந்த மனக்கொதிப்பை யுண்டாக்குவதோடு இந்தத்தீவின் எதிர்கால வாழ்விற்கும் இன்னல்விளைக்கும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பற்பலவிஷயங்களில் மிக மிக நெருங்கிய சம்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதால் இதுசம்பந்தமாக இந்தியர் குடியேறியுள்ள மற்றநாடுகளை எடுத்துக் காட்டுவதில் பயனில்லை.

## “கன்றும் காந்தியடிகளும்”

அன்பார்ந்த ஐயா! தங்கள் 31-10-28-ல்வெளியான “இலங்கை இந்தியனில்” ஸ்ரீமான் எஸ். வி. ராஜன் அவர்கள் ‘மகாத்மாவும் அஹிம்சையும்’ என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள விஷயத்தைப்பார்த்தேன் இதே விஷயத்தை ‘லோகோபகாரி’ (சென்னை) என்ற பத்திரிகையில்” தென்னிந்திய ஜீவரட்சாபிரசாரசபை உபந்யாசகர் ஸ்ரீமான் ஜகதீசராமநாதன்’ அவர்கள் தவறெனக் கூறியிருப்பதையும் பார்த்தேன். இதில் எதைச்சரியெனக்கொள்வது என்ற சந்தேகம் உண்டாவதால் இதை விளக்கும்படி ஸ்ரீமான் ராஜன் அவர்களையே கேட்டுக்கொள்கின்றேன். இருவர் கொள்கைகளும் தக்க காரணங்களுடன் விவரிக்கப்பட்டிருப்பதால்எதைக் கொள்வது எதைத்தள்ளுவது என்று என்னைப்போல் இன்னும்பல நூர்சந்தேகிக்கக்கூடுமாகையால் இவ்விஷயம் விளக்கப்படுதல் நன்றே; இவ்விஷயத்தை ஷை ஸ்ரீமான் ராமநாதனவர்களையும் விளக்கும்படி “லோகோபகாரி” க்கும் எழுதியுள்ளேன். ஸ்ரீமான் ராமநாதன் அவர்களின் வியாசத்தை அடியில் தருகின்றேன்:—

‘அன்பர்களே! அஹிம்சை என்பதற்குக் காந்தியடிகள் கூறும் வியாக்யானமும் அதன்மேல் அவர் செய்யும் வினைகளும் நாட்டுளோர் பலரைவருத்த வைத்துள்ளன. அடிகளின் ஆசிரமத்தில் தொல்லையா நோய்கொண்டு பரிதவித்த ஒரு பசுங்கன்றினை அதன் தோல்வாயிலான் ஒருவகை மருந்தினையுட்செலுத்தி மரணமடையச் செய்தனர். அஹிம்சை என்பது உயிர்களுக்கு நன்மை புகுத்தும்ஒழுக்கமேயாதலால், அக்கன்று கொல்லப்படினும் அதனால் அதற்குத் துயரினின்று விடுதலை கிடைத்தமையால் அக்கொலை “அஹிம்சை”வாய்ப்பட்டதேயென்று மகாத்மா சொல்லுகின்றார். இஃதுபெருந்தவறெனவணக்கத்துடன் அப்பெரியாருக்கும் உலகோருக்கும் அறிவுறுத்தவேண்டுவது எமது கடனாகின்றது.

முதற்கண் ‘அஹிம்சை’ யாவதென்ன? என்பது கவனிக்கற் பாலது. அஹிம்சையின் நோக்கம் உயிர்களுக்கு நலன் பயப்பதே யெனினும் அஃது அவ்வுயிர்களுக்கு இறைவனால் இவ்வுலகில் வதிபவென வகுப்பட்ட காலவரையினை பாதிக்காமலிருத்தல் என்பதே அக்கொள்கையின் அடிப்படை. உயிர்களைப் படைத்தவன் இறைவன். அவன் அருள்வெளியில் அவன் திருவுளக்கோட்பாட்டின்படி அவ்வுயிர்களை இலங்கவைத்து எடுத்தேகுவதும் அவனே. அவனன்றி ஓரணுவும் அசையாது எனபதன் மருமம் இஃதே. ஓர் உயிருக்கும் பிறவுயிரைக்கொல்ல உரிமையில்லை.என் அஃது அவ்வுயிரை மீட்டும் உயர்ப்பிக்கும் ஆற்றல் பெறவில்லை யாகலின் என்க.

நாம் நன்னோக்கத்தோடும் ஓர் உயிரைக் கோறல் செய்ய உரிமை பெறுகிலோம். அக்கோறலால் கோறல் செய்யப்பெறும் உயிருக்கு நன்மை வரினும் அக்கோறல் ஹிம்சையும் அதருமமுமே யாகும். அவ்வினை தீவினையேயாகி நமக்கு நரக தண்டனையளிக்கும். அன்பர்களே! உயிர்கள் யாவும் இன்பம் நுகரவே உலகில்வந்தனவென்றெண்ணவேண்டாம். உயிர்கள் துன்பம்நுகரின் அஃது அவைஇயற்றியவினைப்பயனாகவந்ததேயாதலின் அவை எவ்வாறாயினும் அத்துன்பத்தினின்று மீளக்கூடாது. எனவே, நாம் அவ்வுயிர்களைக் கொலை செய்து அத்துன்பத்தினின்று அவைகளை நாம் மீட்டுவிட்டதாக எண்ணுதல் தவறே. நமக்கு வினைசெய்ய அதிகாரமுண்டேயில்லாது அதன் பயனையும் நாம் எண்ணியவாறு பெற அதிகாரமில்லை. நாம் உயிர்களைத் துயரினின்று மீட்பது என்பதில்லை. அவன் திருவருளும் உயிரின் நல்வினையுமெய்தின், அவ்வுயிர் துயரின்று மீளுகிறது. கோறலால் உயிர்கள் துயரினின்று மீளுவதாகுமெனின் இந்நாட்டில் நூற்றுக் கணக்கானோர் நாள்தோறும் தற்கொலையிலும் பிறருதவியாலும் எமனுலகேகத்தயாராயிருக்கின்றாரென்பது மிகையன்று. குஷ்டரோகிகளும், வெறியர்களும், பொய்யர்களும், திருடர்களும், சோம்பேறிகளும் நந்நாட்டிற்குத் துயர் விளைப்பவராயிருத்தலின் அவரை கொலை செய்து ஒழித்து விடுதல் மகாத்மா கொள்ளும் அஹிம்சைக் கொள்கையின்படி நியாயமாகவிருக்கலாம்.

தருமமென்பது ஒவ்வொருவன் மனப்பான்மையின்படி வகுத்துக்கொள்வதொன்றல்ல. தருமமென்பது உலகில் க்ஷேமத்தையும் நல்லொழுக்கத்தையும் தரிக்கச்செய்வது; அஃதாவது நிலைக்கச் செய்வதோர் பெருநெறியாகும். அஹிம்சாதருமம் அத்தகைய பெருநெறி. அதன் கோட்பாடுகளும், தத்துவங்களும் அநாதியாக ஞானியரால் சங்கைக்கிடமின்றி உலகோருக்கென வகுக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட ஒவ்வொருவனுடைய கொள்கைகளும் தருமமாகாது. அவை அவ்வனுநியான தருமத்தைப்பாதிக்காது. இறைவனது விரிந்த கருணையில் நம்பிக்கையுள்ளவன் தன் கையால் கொலைசெய்து ஓர் உயிருக்கு நன்மை நல்குகின்றேன் எனவிரைவில் ஒவ்வாது.

வெள்ளையர்கள் நோயுற்ற போர்க்குதிரைகளையும் வெறிநாய்களையும் அவைகளுக்கு நன்மைபுரிவதாக வெண்ணிச் சுட்டுக்கொன்று விடுகிறார்கள். அவர்கள் ஆடு, பன்றி, வான்கோழி, மீன்போன்ற உயிர்கள் உலகில்மாந்தருக்குணவாவதன்றி வேறு பயனற்றவென நம்பி அவைகளை வெண்டைக்காய் கத்தரிக்காய்களைப்போலச் சர்வசாமான்யமாய்த்தங்கள் வயிற்றுக்குச் சமர்ப்பித்து வருகின்றனர். அன்னார் கருத்து இவ்வாறிருத்தலால் நாம் அஃது அவர் தருமமென ஏற்றுக்கொள்ளக் கூடுமோ! இத்தகைய கொள்கைகளும் மகாத்மா காந்தி கொண்டுள்ளதுபோன்ற கொள்கையும் நம்நாட்டில் ஓர் கால நிலவியிருந்தனவேயாம். ஆயினும் அவையெல்லாம் உலகமக்கள் அறிவும் அனுபவமும் முதிரமுதிர தவறேயெனக்கண்டு நம் முன்னோரால் கைவிடப்பட்டனவென்பதும் ‘அஹிம்சை’ தருமத்தை அடிப்படையாக நிறுவினசைவம், ஜைனம்போன்ற அரிய சமயங்களைக் கண்டாரென்பதும் வெள்ளிடைமலை·எனவே, நமது அரும்பெருந்தலைவர் காந்தியடிகளின் கருத்தும் அதைத்தொடர்ந்த செயல்களும் நாம் தப்பக்கூடாதன வாயிருப்பதன்றி அவற்றால் நாட்டார் மருள்கொள்ளாது தூய அஹிம்சாநெறியை இறைவன் கருணையில் அசையா உறுதிகாட்டிக் கடைப்பிடிப்பரென இறைஞ்சுகின்றேன்.”

மயிலப்பட்டி
கண்டி;

இங்ஙனம்
அ. ச. அருணாசல
ரெட்டியார்.

## கடிதங்கள்.

### கதர் நிதியை கொத்தலாவலை கம்பெனியார் என்ன செய்யப் போகிறார்கள்?

பத்திராதிபர் அவர்களுக்கு:

கதர் நிதிக்காக வதுளையில் திரட்டிய ரூபாயை மகாத்மாகாந்தி அடிகள் சென்ற வருடம் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையைவிட்டுப் போகும்பொழுது பொதுஜனங்கள் கொடுத்த கதர் நிதிக்கு பின்பு வசூலான கதர் நிதி இப்பொழுது முன் நியமித்த வரவேற்பு கமிட்டியாரிடம் இருக்கிறதாகவும் அதை ஸ்ரீ கொத்தலாவலை (எம்-எல்.ஸி) அவர்கள் வதுளையில் இருக்கிற சுஜ்ஜாதா பள்ளிக்கூடத்திற்கு பொதுஜனங்களுடைய நோக்கத்திற்கு விரோதமாகச் சேர்க்கப்போவதாய்ச் சொல்லுவதாயும் ஒரு நண்பர் நான் சென்றமாதம் வதுளைக்குப் போய் இருக்கும்போது என்னிடம்சொல்லி மிகவும் கவலைப்பட்டார்கள். காந்திஜி வரவேற்புக்கமிட்டியாரிடம் இருக்கும் அந்த நிதியை அவருக்கு அனுப்பிவைப்பதற்கு பலகடிதங்கள் எழுதியும் அதைக்கவனித்து வரவேற்புக்கமிட்டியார் இன்னும் அனுப்பி வைத்ததாகவும் தெரியவில்லையாம். கதர் நிதிக்கு ரூபாய் போதாதென்று மகாத்மா காந்தி அடிகளும் அவர் சகாக்களும் ஓயாமல் பிரசாரம் செய்யும்பொழுது, அதைக் கவனித்துப் பலஜாதியாரும் கொடுத்த இந்தக் கதர்நிதியை ஸ்ரீ கொத்தலாவலை அவர்கள் தங்களுடைய சொந்த ஏகேச்சாதிகாரத்தால் சுஜ்ஜாதா பள்ளிக்கூடத்திற்கு எவ்வண்ணம் இந்தநிதியைப் பொது ஜனங்களுக்கு மாறாய் சேர்க்கத் துணிந்தாரோ தெரியவில்லை. ஸ்ரீ கொத்தலாவலை கம்பேனியார் கதர்நிதிக்குச் செய்யப்போகும் துரோகச்செயலை இந்தியர்கள்மாத்திரம் அல்ல நம் இலங்கை சிங்கள சகோதரர்களும் கண்டிக்காமல் இருக்கமாட்டார்கள். ஸ்ரீ கொத்தலாவலை அவர்கள் ஒரு நிதியை ஏற்படுத்தி அந்த நிதிக்காக வசூல் செய்த ரூபாயை ஸ்ரீ கொத்தலாவலை அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது சில, தான் தோன்றிப் பெயர்வழிகள் வேறுநிதிக்காக அதைச்சேர்க்கப் போகிறதாகச் சொன்னால் ஸ்ரீ கொத்தலாவலை அவர்கள் சும்மா இருப்பார்களா? இப்பொழுது காந்திஜீ கேட்டுக்கொண்டிருக்கும் கதர் நிதியை ஸ்ரீ கொத்தலாவலை வேறு நிதிக்குச் சேர்க்கிறது நியாயமாவென்று அவர்கள் மனதில் இரு கரங்களையும் வைத்து யோசிக்கட்டும்!

சுஜ்ஜாதா பள்ளிக்கூடத்திற்கு ரூபாய் தேவைப்பட்டால் ஏன் ஒரு நிதியைத் திரட்ட முடியாதென்று ஸ்ரீ கொத்தலாவலை அவர்களைக் கேட்கிறேன்.

பதுளை சகோதரர்களே! ஸ்ரீ கொத்தலாவலை அவர்களுக்கு நல்ல புத்தி சொல்லி கதர் நிதியை சீக்கிரம் காந்திஜீக்கு அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யக்கேட்டுக்கொள்ளுகிறேன்·

பெ. செ. அசன்முகிய்யித்தீன்
காவலபிட்டியா,
7—12—28.

கேரளா (கவர்ன்மென்ட்) தொழிற்சாலையில் செய்யப்பட்ட

## உயர்ந்த சோப்புகள்.

மேன்மைதங்கிய முதருஸ் கவர்னர், அவர்கட்கு சாதாரணமாக சோப்புகள் செய்யும் சாலை.

அநேக தங்க மெடல்களும் மற்றும் பல நற்பரிசுகளும் வெகுமதியாகப் பெற்ற செய்புகள்.

ரெயில்வேக்காரர்களும், கவர்ன்மென்டாரும். மற்றும் யாவரும் வெகுவாக உபயோகித்துவருகின்றனர்.

**சந்தன சோப்பு**

இது உயர்ந்த அருமையான சந்தனத் தைலத்தினலும் சிறந்த மூலிகைகளினலும் சேர்த்து செய்யப்பட்டது. குளிமையைக் கொடுக்கக்கூடியது. தேகத்திற்கு ஆரோக்கியமும், உடம்பிற்கு உற்சாகமும் சுறுசுறுப்பும் வேண்டுமானல், இதையே உபயோகியுங்கள். பரிமள கந்தமுடையது. உபயோகித்தோரே இதன் பெருமையறிவார்கள்.

**வாஷ்வெல் சோப்பு**

உங்கள் வஸ்திரங்களை சுத்தமாகவும் வெண்மையாகவும் வைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா? அழுக்கைப் போக்கவேண்டுமானல் எங்கள் வாஷ்வெல் சோப்பே இதற்கு நிகரற்றது. விலை சரசம். வாஷ்வெல் என்றபெயர் இதற்கே தகும்.

**வெஜிடால் சோப்பு**

தூய வெண்மைநிறமுள்ளது. தாவர ஜவங்களினல் மட்டுமே செய்யப்பட்டது. சுகந்த வாசனையுடையது. மற்ற சவுக்காரங்களைப்போலல்லாமல், உப்புத் தண்ணீரிலும் கரைந்து நுரைகொடுக்கும். இதில் கொழுப்புச் சேராததால், இந்தியாவில் இஸ்லாமியர்களும், இந்துக்களும் வெகுவாக இதையே உபயோகிக்கிறார்கள்.

இலங்கை ஏஜண்டுகள் :—

தேவார் அண்டு கம்பெனி,
90, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு.

டெலிபோன் 2558.
தந்திவிலாசம் :—“ பௌன்மார்க் ”. ‘Pounmark’.

எல்லா தாய்மார்களுக்கும்

சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள்பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீங்கள் இழந்த பலத்தையும், தேக வலிமையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது “ஹக்கோஸன்” ஒன்றே மற்றவைகளினல் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது.

தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி, ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.





**பல பிரமிக வைத்தியர்களால்
இது மிகவும் மேலானதெனச்
சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.**

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.**

Ford

புதிய டூரிங் கார்



உங்களுடையது

ரொக்கம் ரூபாய் 2450

அல்லது

முதலில் காரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது (இன்ஷூரன்ஸ தொகை தவிர) ரூபாய் 800-ம் செலுத்தி மீதி தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 164 வீதம் 11 மாதமாகவும் செலுத்த வேண்டும்.

உங்கள் பக்கத்திலுள்ள போர்ட் வியாபாரிக்காவது ஸிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்களுக்காவது எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளவும்.

பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
கொழும்பு.

# இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

—oo—

**'இலங்கை இந்தியன் பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும்' என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—**

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்பத்திரிகை இது ஒன்றே.
2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணகஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதிஇப்பத்திரிகை பாடுபட்டு வருகிறது.
3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மென்டாலும் இலங்கை கவர்மென்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.
4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும்உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.
5. பத்திரிகை பிரசுரிப்பதில் ஏற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!
6. இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை. தனக்கேற் பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறார். தனது தொழிலி லீடுபட்டு சுலபமாக பணத்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறார்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
"இலங்கை இந்தியன்" மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டார்ப் தெரு, கொழும்பு.

சந்தா விபரம்.

—o—

| | | |
|---|---|---|
| இந்தியா இலங்கை முதலிய விடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்..........................................................................

பெயர்..........................................................................

விலாசம்........................................................................

..................................................................................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

Printed and published for the Proprietor by H. Nelliah B. A. [residing at 97 Mlaiban St. Colombo] at the "Ceylon Indian" Printing Works. 107B. Hulftsdorp Street, Colombo.